**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**
**O.S. No. 755/2023**
**Deposition of Witness for the Plaintiff – PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **ராஜ்கமல்** | **Caste:** | |
| **Father/ Husband Name** | **கண்ணன்** | **தொழில்** | ரியல் எஸ்டேட் தொழில |
| **Village:** | **நஞ்சய தெரு** | **Religion:** | |
| **Taluk:** | **கரூர் வட்டம்** | **Age :** | 38 |

The Oaths Act 1969 (Act 44/1969) – இன் விதிமுறைகளின் படி 31.10.2025 நாளாகிய இன்று திரு.சி.வேடியப்பன். M.A.,M.L., முதன்மை சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் மூன்றாம் தரப்பினர் ஆவன். நான் வாதிக்கு ஆதரவாக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கடந்த 11.12.2017 ம் தேதியன்று வாதிகள் 1.வெங்கடேசன் மற்றும் 2. செல்வி ஆகியோர்களுக்கு, பிரதிவாதி நாச்சிமுத்து மகன் ரமேஷ் (Yes Construction உரிமையாளர்) தாவா சொத்தை பொறுத்து வீடு கட்டும் ஒப்பந்த பத்திரம் ஒன்றை எழுதிக்கொடுத்தார். அவ்வாறு, வீடு கட்டும் ஒப்பந்த பத்திரத்தை பிரதிவாதி எழுதிக்கொடுத்த போது, வாதிகளிடமிருந்து ரூ. 2,00,000/-த்தை பெற்றுக்கொண்டார். பிரதிவாதி, தாவா சொத்தில் உள்ள 1430 சதுர அடியில் சுமார் 600 சதுரடிக்கு ஆர்.சி.சி லாகட வீட்டை ரூ. 9,00,000/-த்திற்கு கட்டிதருவதாக ஒப்புக்கொண்டு, ரூ. 2,00,000 த்தை முன்தொகையான வாதிகளிடமிருந்து பெற்றுக்கொண்டார். அந்த வீடு கட்டும் ஒப்பந்த பத்திரம் எழுதியபோது, நான் உடனிருந்தேன். நான் மேற்படி ஒப்பந்தத்தில் ஒரு சாட்சி கையொப்பம் செய்தேன்.எ ன்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 வீடு கட்டும் ஒப்பந்த பத்திரத்தில் 2 வதாக உள்ள சாட்சி

கையொப்பம் என்னுடையதுதான். என் தரப்பு சாட்சியத்தில் நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து, புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன். நான் தான் ராஜ்கமல் என்பதனை காட்டுவதற்கு என்னுடைய ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆதார் அட்டையின் நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு நகல் **வா.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.